செ.வெ.எண்: 45 நாள்: 23.10.2021

**பெரம்பலூர் மாவட்டத்தில் 6வது கட்டமாக நடைபெறவுள்ள மாபெரும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டனர்.**

பெரம்பலூர் துறைமங்கலம் TELC தொடக்கப் பள்ளியில் மாபெரும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாம் துவக்க நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.10.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள், ஆகியோர் கலந்து கொண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் மாபெரும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமினை துவக்கி வைத்தனர். அதனைத்தொடர்ந்து உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் **“சற்றே குறைப்போம்”** விழிப்புணர்வு பதாகையினை வெளியட்டார்கள். மேலும் உணவு விடுதிகள் மற்றும் திருக்கோயில்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு சுகாதார குறியீடு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்விற்கு பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.பிரபாகரன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.சி.ராஜேந்திரன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**பின்னர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இன்று தமிழகம் முழுவதும் 50,000 இடங்களில் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெற தொடங்கியுள்ளது. 6ஆம் கட்ட மிகப்பெரிய மெகா தடுப்பூசி முகாம்கள் தமிழகத்தில் பெரிய அளவில் எழுச்சியுடன் தொடங்கியுள்ளது. காலையிலிருந்தே பல்வேறு இடங்களிலிருந்து தொலைபேசிகளின் மூலம் கேட்டறிந்து மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு வருகை தந்து தடுப்பூசியை போட்டுக் கொள்ள ஆர்வமுடன் இருக்கிறார்கள் என்கின்ற தகவல் மகிழ்ச்சி அளிக்கிறது. மாலை 7 மணி வரை தடுப்பூசி போடப்படும். குறிப்பாக 60 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளார்கள். அவர்களில் 30இலட்சம் பேருக்கு மாபெரும் முகாம் மூலம் தடுப்பூசி செலுத்தும் நோக்கில் இந்த 50,000 முகாம்கள் இன்று நடத்தப்பட்டு கொண்டிருக்கிறது.

இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டியவர்கள் அவரவர்களுடைய இல்லங்களுக்கு அருகில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த முகாம்களில் வருகை தந்து தடுப்பூசியை இன்று மாலை 7 மணிவரை செலுத்திக் கொள்ளலாம் என்று அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். தமிழகத்தை பொறுத்தவரை 68 சதவிகிதம் முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது தவணை தடுப்பூசி பொறுத்தவரை 26சதவீதம் முடிவுற்று இருக்கிறது. இன்றைய மெகா முகாம்களுக்கு பிறகு WHO, ICMR போன்ற சுகாதார அமைப்புகள் சொல்லியிருப்பதைப் போல 70 சதவீதம் தடுப்பூசி முதல் தவணை செலுத்திக் கொண்டால் மட்டுமே இந்த தொற்றிலிருந்து பெரிய அளவில் தீர்வாக இருக்கும் என சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த 70 சதவீத இலக்கை இன்று அடைவோம் என எதிர்பார்க்கிறோம். அந்த அளவிற்கு இன்று எல்லா இடங்களிலும் தடுப்பூசி முகாம்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பெரம்பலூரை பொறுத்தவரை 6வது மெகா தடுப்பூசி முகாம் 375 இடங்களில் அமைக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே நடைபெற்ற தடுப்பூசி முகாம்களை பொருத்தவரை 240 முகாம்கள்தான் அதிகபட்ச முகாம்களின் எண்ணிக்கை என்கின்ற அளவில் இருந்தது. அது இன்றையதினம் 375 ஆக உயர்த்தி மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான நிர்வாகம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளனர். 375 முகாம்களிலும் 50 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி செலுத்துவது என்ற இலக்கோடு முகாம்கள் தொடங்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தை பொறுத்தவரை ஏற்கனவே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 100%

தடுப்பூசி போடப்பட்ட மாவட்டமாகவும், 12 ஊராட்சிகளில் 100% தடுப்பூசி போடப்பட்ட மாவட்டமாகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

முதல் தவணை தடுப்பூசி செலுத்தி கொண்டவர்கள் என்கின்ற வகையில் மாநில அளவிலான சதவீதம் 68 என்று இருந்தாலும், பெரம்பலூரை பொருத்தவரை 69.2 சதவீதம் முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டு இருக்கிறது. இரண்டாவது தவணை தடுப்பூசி பொருத்தவரை மாநில அளவில் 26% இருக்கிற நிலையில் பெரம்பலூர் மாவட்டத்தை பொறுத்தவரை 34.3 என்கின்ற சதவீதத்தோடு முன்னிலையில் இருக்கிறார்கள். இது இந்திய அளவிலான சதவீதத்தை காட்டிலும் கூடுதலான வகையில் இரண்டாவது தடுப்பூசியினை பெரம்பலூர் மாவட்டம் செலுத்திக் கொண்டுள்ளனர். அந்த வகையில் இந்த தடுப்பூசி போடும் பணிகள் பெரம்பலூர் மாவட்டத்தில் மிகச் சிறப்பாகவே நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த பணிகளை நானும், நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களும், மாவட்ட ஊராட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் போன்ற உயர் அலுவலர்களும் இந்த பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

தமிழகத்தை பொறுத்தவரை 700க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளிலும் 4 நகராட்சிகளும் முழுமையாக முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை பழங்குடியினர் மற்றும் பொதுமக்கள உள்ளிட்ட அனைவருக்கும் முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் 12 கிராம ஊராட்சியில் முழுமையாக முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டுள்ளது. சிறப்பு முகாம்களை பயன்படுத்தி அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

அதனைத்தொடர்ந்து வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஒதியம் கிராமத்தில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் சர்க்கரை நோயாளிகள் மற்றும் இரத்த கொதிப்பு உள்ளவர்களின் வீடுகளுக்கு இரண்டு மாதங்களுக்கான மாத்திரைகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள், ஆகியோர் வழங்கினார்கள். மேலும் குன்னம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 6வது கட்டமாக நடைபெற்று வரும் கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாமினை பார்வையிட்டு, டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு நிதியுதவி மற்றும் ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி(ஆலத்தூர்), திருமதி மீனா அண்ணாதுரை(பெரம்பலூர்), திருமதி பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), இணை இயக்குநர்கள் (பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை) மரு.நிர்மல்சன், மரு.சம்பத் குமார், திட்ட இயக்குநர்(ஊரக வளர்ச்சி முகமை) திருமதி அ.லலிதா, வருவாய் கோட்டாட்சியர் திருமதி நிறைமதி சந்திரமோகன், துணை இயக்குநர்(சுகாதார பணிகள்) மரு.செந்தில் குமார், மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்புத்துறை) மரு.கவிகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.மதியழகன், டாக்டர்.கருணாநிதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிதிநிதிகள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மருத்துவ பணியாளர்கள், உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.**